3. விதி 110-ன்கீழ் அறிக்கை

தென் மாவட்டங்களின் சமூக, பொருளாதார, தொழில் வளர்ச்சிக்கான உயர்நிலை ஆணையம் அமைத்தல் பற்றி மாண்புமிகு முதலமைச்சரின் அறிக்கை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 110-ன்கீழ் பேரவைக்கு ஓர் அறிக்கை வைக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதி கேட்டிருக்கின்றார்கள். அவர்களுக்கு அனுமதி அளிக்கப்படுகின்றது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 110-ன் கீழ் இந்த அறிக்கையினை அவைமுன் வைக்கின்றேன்.

'தென் மாவட்டங்களில் உள்ள மக்களின் வாழ்க்கை நிலையை உயர்த்திடவும், அவர்களின் கல்வி, பொருளாதார மேம்பாடு, வேலைவாய்ப்பு, தொழில் வளர்ச்சி போன்ற முன்னேற்றங்களை உருவாக்கிடவும், அரசு சார்பில் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து ஆராய்ந்தறிந்து மேம்பாட்டுத் திட்டம் ஒன்றை வகுத்தளிக்க உயர்மட்டக் குழு ஒன்று அமைக்கப்படும்' என்று 17.3.1999 அன்று இந்த அவையில் வைக்கப்பட்ட நிதிநிலை அறிக்கையில் குறிப்பிட்டிருந்தேன். இந்த அறிவிப்பிற்குச் செயல்வடிவம் கொடுக்கும் வகையில், புதுக்கோட்டை, சிவகங்கை, இராமநாதபுரம், மதுரை, திண்டுக்கல், தேனி, விருதுநகர், தூத்துக்குடி, திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் உள்ள மக்களின் பொருளாதார வளர்ச்சிக்காக "தென் மாவட்டங்களுக்கான சமூக, பொருளாதார, தொழில் வளர்ச்சிக்கான உயர்நிலை ஆணையம்" "High Power commission for Socio-economic and Industrial Development of Southern Districts" ஒன்றை அமைக்க அரசு முடிவு செய்துள்ளது. இதன் தலைவர் மற்றும் உறுப்பினர்கள் பின்வருமாறு:

(1) நீதியரசர் திரு. இரத்தினவேல் பாண்டியன், உச்சநீதிமன்ற முன்னாள் நீதியரசர் .. தலைவர்

(2) திரு. ஆர்.ஏ. சீதாராமதாஸ், I.A.S., (ஓய்வு) .. துணைத் தலைவர்

(3) திரு. ஏ. வெங்கட்ராமன், I.A.S., (ஓய்வு) மாநில திட்டக் குழு உறுப்பினர் — உறுப்பினர்

பிற்பட்டோர் மற்றும் மிகவும் பிற்பட்டோர் நலத் துறைச் செயலாளர் திரு. என். முருகன், I.A.S. இந்த ஆணையத்தின் செயலாளராக இருப்பார்.

ஆணையத்தின் தலைவர் நீதியரசர் திரு. இரத்தினவேல் பாண்டியன் நெல்லை மாவட்டத்தைச் சார்ந்தவர். துணைத் தலைவர் திரு. சீதாராமதாஸ் பிரிக்கப்படாத மதுரை மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் மாவட்ட ஆட்சித் தலைவராகப் பணிபுரிந்து அனுபவம் பெற்றவர். திட்டக் குழு உறுப்பினர் திரு. வெங்கட்ராமன் அவர்கள் தமிழக அரசில் வேளாண்மைக் துறை இயக்குநர், வேளாண்மைத் துறைச் செயலர், வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் போன்ற பொறுப்புக்களில் பணிபுரிந்ததோடு மட்டுமல்லாமல் உலக வங்கியில் ஆலோசகராகவும் இருந்தவர்.

உயர்நிலை ஆணையத்தின் ஆய்வு வரம்புகள் Terms of reference பின்வருமாறு:

(1) புதுக்கோட்டை, சிவகங்கை, இராமநாதபுரம், மதுரை, திண்டுக்கல், தேனி, தூத்துக்குடி, விருதுநகர், திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி ஆகிய தென் மாவட்டங்களில் பொருளாதார வளர்ச்சிக்குத் தடையாக உள்ளவைகளைக் கண்டறிதல்;

(2) மேற்கூறிய மாவட்டங்களில் உள்ள மக்களுக்குக் கல்வி, சமூக, பொருளாதார மேம்பாடு, வேலைவாய்ப்பு போன்ற முன்னேற்றங்களை உயர்த்திட வழிவகைகளை ஆராய்தல்;

(3) மேற்கண்ட இனங்களில் தென் மாவட்டங்களில் உள்ள மக்களின் முன்னேற்றத்திற்கு அரசு சார்பில் எடுக்க வேண்டிய நடவடிக்கை குறித்து பரிந்துரை செய்தல்; மற்றும்

(4) மேற்படி பரிந்துரையின் அடிப்படையில் தென் மாவட்டங்களில் பொருளாதார வளர்ச்சிக்கான மேம்பாட்டுத் திட்டம் ஒன்றை வகுத்தளித்தல்.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

இந்த ஆணையம் ஜனவரி 2000-க்குள் தனது அறிக்கையை அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

4. சிறப்புக் கவன ஈர்ப்பு

(அ) சிவகங்கை மாவட்டம், திருப்புவனம் காவல் நிலையத்தில் மாணவர் மரணம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, சிறப்புக் கவன ஈர்ப்பு. சிவகங்கை மாவட்டம், திருப்புவனம் காவல் நிலையத்தில் மாணவர் ஒருவர் இறந்தது குறித்து, மாண்புமிகு உறுப்பினர்கள் டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன், திரு. சி. ஞானசேகரன், திரு. கே. தங்கமணி, திரு. ஐ. கணேசன், திரு. எஸ். திருநாவுக்கரசு, திரு. சி. வேலாயுதன், திரு. லா. சந்தானம், திரு. பி.என். வல்லரசு, திரு. டி. மணி ஆகியோர் அறிவிப்புகள் கொடுத்திருக்கிறார்கள். கட்சிக்கு ஒருவர் என்ற முறையில் திரு. சி. ஞானசேகரன் அவர்களை முதலில் பேச அழைக்கின்றேன்.

முற்பகல் 10-35

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிவகங்கை மாவட்டம் திருப்புவனத்தில் நேற்றைக்கு முந்தைய நாள் தேவர் குரு பூஜைக்குப் போவதற்காக சில அமைப்புகள் அங்கே ஏற்பாடு செய்து கொண்டிருந்தபோது அவர்களுக்கு வாகனங்கள் சரியாகக் கிடைக்கவில்லை என்ற காரணத்தாலோ, அங்கு டாக்ஸி, வேன் வைத்துக் கொண்டிருக்கிறவர்கள் குரு பூஜைக்கு நாங்கள் வாகனங்களை எடுத்து வரமாட்டோம் என்று சொன்ன காரணத்தாலோ, அவர்கள் சாலை மறியல் செய்ய, பிறகு காவலர்கள் எல்லாம் அங்கு சென்று, நாங்கள் சிறப்புப் பேருந்து ஒன்றை ஏற்பாடு செய்கிறோம் என்று சொல்லி, பிறகு பேருந்து வரவும் காலதாமதமான காரணத்தினாலே, அங்கே ஒரு புகைச்சல் ஏற்பட்டிருக்கிறது. பிறகு அங்கு நடந்த அந்தக் குழப்பத்தில் 14 வயது மாணவன் ஜெகதீசன் என்பவனும் மற்றும் சிலரும் காவல் நிலையத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டு, காவல் நிலையத்தில் வைத்துக்கொண்டிருந்தபோது அந்த மாணவன் அந்த இடத்திலே, காவல் நிலையத்திலே மரணம் அடைந்திருக்கிறான். மருத்துவமனைக்கு எடுத்துச் சென்றபோது, அந்த இடத்திலே அவன் இறந்துவிட்டான் என்று சொன்னபிறகு, இந்தச் செய்தி அந்த மாவட்டத்தினுடைய பல பகுதிகளிலே பரவ, ஆங்காங்கே